
IEREM ET SEMEN TUUM ET SEMEN
ILLIUS IPSUM CONTERET CAPUT TUUM • ECCE MATER TUA •
DIT • MULIER ECCE FILIUS TUUS
INIMICITIAS PONAM INTER TE ET MUL
BEATA QUAE CREDI
MAGNIFICAT ANIMA MEA DOMINUM
LEGIO MARIAE

மரியாயின் சேனை செபங்கள்

1. சேனை ஆரம்ப செபம்

முதல்: தந்தை,மகன், தூய ஆவியின் பெயராலே.

அனை: ஆமென்.

அனை: தூய ஆவியே எழுந்தருளி வாரும், உம்முடைய விசுவாசிகளுடைய இருதயங்களை நிரப்பும். அவைகளில் அன்பின் நெருப்பை மூட்டியருளும்.

முதல்: ஆண்டவரே உமது ஆவியை அனுப்பியருளும். அவரால் அவை படைக்கப்படும்.

அனை: அதனால் உலகின் முகத்தைப் புதுப்பிப்பீர்.

செபிப்போமாக

முதல்: தந்தையாம் இறைவா! உமது தூய ஆவியின் கொடைகளை உலகின் மேல் பொழிந்தருளும். நற்செய்தியை போதிக்க துவங்கிய காலத்தில் உமது திருச்சபையின் மேல் உமது ஆவியைப் பொழிந்தீரே, இக்காலத்தில் அதே ஆவியானவர், விசுவசிக்கும் அனைத்து உள்ளங்களின் மூலமாக செயல்பட வேண்டுமென்று, எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வழியாக

மன்றாடுகிறோம். அனை: ஆமென்.

மு : ஆண்டவரே, நீர் என் இதழ்களைத் திறந்தருளும்.

அ : என்நாஉம்மைப் புகழக்கடவது.

மு: இறைவா நீர் எனக்கு உதவியாக வாரும் .

அ : ஆண்டவரே, நீர் எனக்கு உதவி செய்ய விரைந்து வாரும்.

மு : தந்தைக்கும், மகனுக்கும், தூய ஆவிக்கும் மகிமை உண்டாவதாக.

அ : ஆதியில் இருந்தது போல....

(செபமாலையின் ஐந்து பத்து மணி செபம் சொல்ல வேண்டும்)

கிருபைதயாபத்து செபம்

எல்: கிருபைதயாபத்துக்கு மாதாவாயிருக்கிற எங்கள் இராக்கினியே வாழ்க / எங்கள் சீவியமே. எங்கள் தஞ்சமே /எங்கள் மதுரமே வாழ்க / பரதேசிகளாயிருக்கிற நாங்கள், ஏவையின் மக்கள் / உம்மைப் பார்த்துக் கூப்பிடுகிறோம். /இந்தக் கண்ணீர்க் கணவாயிலிருந்து பிரலாபித்தழுது.

உம்மையே நோக்கிப் பெருமூச்சு விடுகிறோம். /ஆதலால் எங்களுக்காக வேண்டி மன்றாடுகிற தாயே,/உம்முடைய தயாளமுள்ள திருக்கண்களை எங்கள் பேரில் திருப்பி யருளும் . /இதன்றியே நாங்கள் இந்தப் பரதேசங் கடந்த பிற்பாடு

உம்முடைய திருவயிற்றின் கனியாகிய இயேசு நாதருடைய பிரத்தியட்சமான தரிசனத்தை எங்களுக்கு தந்தருளும், கிருபாகரியே,/தயாபரியே, பேரின்ப இரக்கமுள்ள கன்னிமரியே/

மு: இயேசு கிறிஸ்துவின் வாக்குறுதிகளுக்கு நாங்கள் தகுதி ஆகுவதற்காக.

அ: இறைவனுடைய தூய மாதாவே, எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்.

செபிப்போமாக

முதல்: ஓ இறைவா, உமது ஒரே குமாரனின் வாழ்வினாலும், மரணத்தாலும், உயிர்ப்பினாலும் நித்திய இரட்சண்யப் பேறு பலன்களை எங்களுக்கு பெற்றுத் தந்தருளினீரே. தூய கன்னி மரியாயின் தூய செபமாலையில் அடங்கியுள்ள இப்பரம இரகசியங்களைத் தியானித்து, அவைகளில் உள்ளவைகளை நாங்கள் கண்டு பாவிக்கவும், அவைகள் வாக்களிப்பதை நாங்கள் அடையவும் தயை செய்தருள வேண்டுமென்று எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வழியாக உம்மை பார்த்து மன்றாடுகிறோம்.

அ :ஆமென்.

மு:இயேசுவின் மிகவும் தூய இருதயமே,

அ: எங்கள் மேல் இரக்கமாயிரும்.

மு:மரியாயின் மாசற்ற இருதயமே,

அ: எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

மு:தூய யோசேப்பே,

அ: எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

மு:நற்செய்தியாளரான தூய யோவானே,

அ: எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

மு:தூயலூயி மரி தெ மோன்போர்த்தே.

அ: எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்

மு:தந்தை, மகன், தூய ஆவியின் பெயராலே, ஆமென்.

2. சேனையின் சங்கிலி செபம்

(இது கூட்ட நிகழ்ச்சிகளின் நடுவில் எழுந்து நின்று சொல்ல வேண்டிய செபம். ஒவ்வொரு சேனையாளரும் நாள்தோறும் இதைச் சொல்ல வேண்டும்.)

அ: "வைகறை போல் தோற்றம், திங்களைப் போல் அழகு. ஞாயிறு போல் ஒளி,போரணி போல் வியப்பார்வம். யாரிவர்?"

மு:ஆண்டவரை எனதுள்ளம் + போற்றிப் பெருமை படுத்துகின்றது. (சிலுவை அடையாளம் வரையவும் )

என் மீட்பராம் கடவுளை நினைத்து எனது மனம் பேருவகை கொள்கின்றது.

மு:ஏனெனில் அவர் தம் அடிமையின் தாழ்நிலையைக் கண்ணோக்கினார். இது முதல் எல்லா தலைமுறை யினரும் என்னை பேறுபெற்றவர் என்பர்.

ஏனெனில் வல்லவராம் கடவுள் எனக்கு அரும்பெரும் செயல்கள் செய்துள்ளார். தூயவர் என்பதே அவரது பெயர்.

மு:அவருக்கு அஞ்சி நடப்போருக்குத் தலைமுறை தலைமுறையாய் அவர் இரக்கம் காட்டி வருகிறார்.

அ:அவர் தம் தோள் வலிமையைக் காட்டியுள்ளார். உள்ளத்தில் செருக்குடன் சிந்திப்போரைச் சிதறடித்து வருகிறார்.

மு:வலியோரை அரியணையினின்று தூக்கி எறிந்துள் ளார். தாழ்நிலையில் இருப்போரை உயர்த்துகிறார்.

பசித்தோரை நலன்களால் நிரப்பியுள்ளார். செல்வரை வெறுங்கையராய் அனுப்பிவிடுகிறார்.

மு: மூதாதையருக்கு உரைத்தபடியே அவர் ஆபிரகாமையும் அவர் தம் வழி மரபினரையும் என்றென்றும் இரக்கத்தோடு நினைவில் கொண்டுள்ளார்.

அ:தம் ஊழியராகிய இஸ்ரேயலுக்குத் துணையாக இருந்துவருகிறார்.

மு:தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவிக்கும் மகிமை உண்டாவதாக.

அ:தொடக்கத்தில் இருந்தது போல் இப்பொழுதும் எப்பொழுதும் என்றென்றும் இருப்பதாக. ஆமென்.

எல்: "வைகறை போல் தோற்றம்; திங்களைப்போல் அழகு: ஞாயிறு போல் ஒளி; போரணி போல் வியப்பார்வம் ; யாரிவர்?"

மு:ஜென்மப் பாவமின்றி உற்பவித்த மரியாயே.

அ:உம்மை நாடிவரும் எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்.

செபிப்போமாக

மு: எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே, தந்தையிடம் எங்களுக்காகப் பரிந்து பேசுபவரே, உமது தாயாகிய மிகவும் பரிசுத்த கன்னிகையே எங்களுக்கும் தாயாகவும். உம்மிடம் எங்களுக்காக பரிந்து பேசுகிறவராகவும், நியமிக்கத் திருவுளமானீரே, உம்முடைய வரங்களைத் தேடி உம்மை நாடி

வருபவர்கள் அனைவரும் அவர் வழியாக அவற்றைப் பெற்று மகிழுமாறு அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

அ : ஆமென்.

3. சேனை இறுதி செபம்

(இது கூட்டத்தின் முடிவில் சொல்ல வேண்டிய செபம்)

முதல்: தந்தை, மகன், தூயஆவியின் பெயராலே

அ : ஆமென்.

எல்லோரும்: கடவுளின் தூய அன்னையே! இதோ

உம்மிடம் அடைக்கலம் தேடி வருகிறோம். எங்கள் தேவைகளில் நாங்கள் உமக்கு ஒப்புக்கொடுக்கும் மன்றாட்டுக்களைப் புறக்கணியாதேயும், மாட்சிமை பொருந்திய ஆசீர்வதிக்கப்பட்ட கன்னிகையே! எல்லா ஆபத்துக்களினின்றும் எப்பொழுதும் எங்களைப் பாதுகாத்தருளும்.

மு: எல்லா அருள் வரங்களின் மத்தியஸ்தியாகிய அமலோற்பவ மரியே.

(அல்லது பிரசிடியத்தின் பெயரைக் கன்னித் தாயின் பெயரோடு இணைத்துச் சொல்லவும்).

அ:எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

மு:தூயமிக்கேலே, தூய கபிரியேலே, தூய இரபேலே.

அ:எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்.

மு: வானுலக வல்லமைகள் அனைத்துமே, மரியாயின் வானதூதர்களின் சேனையே.

அ:எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்.

மு:தூய திருமுழுக்கு யோவானே.

அ:எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

மு:பேதுரு, பவுல் என்னும் புனிதர்களே,

அ:எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.

செபிப்போமாக

(எல்லோரும் சேர்ந்து சொல்ல வேண்டும்)

எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே. மரியன்னையின் கொடியின் கீழ் போர் புரியும் எங்களுக்கு, உம்மீது குறைவற்ற விசுவாசத்தையும்/உமது அன்னையின் மீது நிறை நம்பிக்கையும் தந்து உலகத்தை வெல்லுமாறு வல்லமை அளித்தருளும். எங்கள் செயல்கள் அனைத்தையும் /உம்மீதுள்ள அன்பிற்காக மட்டும் செய்யவும் /எங்கள் அயலாரில் உம்மையே கண்டு /உமக்கே பணி புரியவும் /இறை அன்பால் ஊக்கம் பெற்ற உயிருள்ள விசுவாசத்தைத் தந்தருளும். வாழ்க்கையில் நேரிடும் சிலுவைகளிலும் வருத்தங்களிலும்/ ஏமாற்றங்களிலும் நாங்கள் மனந்தளராமல் அமைதியாயிருக்க /கற்பாறை போன்ற உறுதியான அசைக்க முடியாத விசுவாசத்தை தந்தருளும். கடவுளுக்காகவும் ஆன்மாக்களின் மீட்புக்காகவும் / பெருங்காரியங்களைத் தயக்கமின்றித் தொடங்கவும் தொடர்ந்து செய்யவும் துணிவுள்ள விசுவாசத்தை எங்களுக்குத் தந்தருளும் /நாங்கள் ஒற்றுமையுடன் முன்னேறிச் செல்லவும், இறையன்பின் நெருப்பை எங்கும் எரியச் செய்யவும்/ இருளிலும், சாவின் நிழலிலும் இருப்பவர்களுக்கு ஞான ஒளி தரவும், ஆர்வமற்றவர்களுக்கு ஊக்கம் ஊட்டவும், பாவத்தால் ஆன்ம உயிர் இழந்தவர்களுக்கு மீண்டும் உயிர் கொடுக்கவும் /சமாதானத்தின் வழியில் நாங்கள் அடிசறுக்காமல் நடந்து செல்லவும் /எங்களுக்கு நெருப்புத் தூண்போல் /துணை புரியும் விசுவாசத்தைத் தந்தருளும்.இவ்வாறு வாழ்க்கை என்னும் போராட்டம் முடிவடைந்த பிறகு, எங்கள் சேனை முழுவதும் /அதன் உறுப்பினர்கள் ஒருவரையும் இழக்காமல்/ உமது அன்பும் மாட்சியும் விளங்கும் / நித்திய பேரின்ப நாட்டில் உமது முன்னிலையில் / மீண்டும் அணிவகுத்து நிற்க அருள் புரிந்தருளும், ஆண்டவரே. ஆமென்.

மு:இறந்த நம் சேனையார் ஆன்மாக்களும், இறந்த விசுவாசிகள் அனைவரின் ஆன்மாக்களும், கடவுள் இரக்கத்தினால் சமாதானத்தில் இளைப்பாறுவனவாக. ஆமென்.

(பிறகு குரு தம் ஆசீர் வழங்குகிறார். குரு இல்லை யெனில் தந்தை, மகன், தூய ஆவியின் பெயராலே ஆமென் சொல்லவும்)